

ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் ஏற்பாட்டில் ஆனைக்கல் பாளையத்தில் புதிய தி.மு.க. அலுவலகத்தை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி மக்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து கழகத் தலைவரின் ஆணைக்கிணங்க கோடை வெப்பத்தை தணிக்க, பொதுமக்களுக்கு கம்மங்கூழ், நீர்மோர், பழரசங்களை வழங்கினர். நிகழ்வில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் வ.கதிர்வேல், விஜயகுமார், சென்னிமலை ப.செங்கோட்டையன், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியன், டி.எஸ்.குமாரசாமி, துணை மேயர் வி.செல்வராஜ், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், தேவேந்திரன், விஸ்வநாதன், அவல்பூந்துறை பேரூர் செயலாளர் சாமியப்பன், டி.பிரகாஷ், எஸ்.வி.என்.சங்கர், தர்மலிங்கம், சம்பத், ஆர்.பி.பாலு, பிரசாந்த், சிற்றரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில், ஆண்டிமடம் கடைவீதியில் அமைக்கப்பட்டுள்ள கோடைகால தண்ணீர் பந்தலை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து இளநீர், நீர்மோர், தர்பூசணி, வெள்ளரி ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஆண்டிமடம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ரெங்க.முருகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிஸ்கதிரவன், ஒன்றிய அவைத் தலைவர் இராமதாஸ், தொமுச கொளஞ்சி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆப்ரகாம், ஒன்றிய இளைஞரணி சதீஷ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக 41.38 இலட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி!

## அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் பதிலுரை... III பக்கத் தொடர்ச்சி

இலக்கை எய்திட, உறங்க மறந்து உழைக்கும் எங்கள் தளபதி ஆளட்டும் நூறாண்டு! தமிழ் மக்கள் பெறட்டும் பல பேறு! இதைச் சொல்லும் 2026.

முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் 2025-2026 ஆம் ஆண்டிற்கான 9 புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

**1. பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்**

பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை வசதிகள் ரூபாய் 3 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையம் (CSTI) பொது நிருவா கத்தின் வலுவான முதுகெலும்பாக உள்ள அமைச்சு மற்றும் நீதித் துறை அலுவலகப் பணியாளர்களின் பயிற்சி தேவைகளை நிறைவேற்றுகிறது. அதிகரித்துவரும் பயிற்சி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அந்நிறுவனத்தின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, புதிய நவீன சமையற்கூடம் அமைத்தல், ஏற்கெனவேயுள்ள பல்நோக்கு சமுதாயக் கூடத்தினை உணவுக் கூடமாக மாற்றி அமைத்தல் மற்றும் தலைகீழ் சவ்வூடு பரவல் இயந்திரம் (RO) அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 3 கோடி மதிப்புள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**2. சென்னை, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் கணினி ஆய்வகத்தை மேம்படுத்துதல்**

சென்னை, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் கணினி ஆய்வகம் ரூபாய் 55 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். சென்னையில் உள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி (AASC) பணியிடை பயிற்சி உள்ளிட்ட பலதரப்பட்ட குறுகிய கால பயிற்சியுடன், அகில இந்திய பணி (AIS) அலுவலர்கள் மற்றும் குரூப் ‘அ’ மற்றும் ‘ஆ’ நிலையிலுள்ள அலுவலர்கள் ஆகியோரின் பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்னணி பயிற்சி நிறுவனமாக உள்ளது. இவ்வாறான பயிற்சித் திட்டங்களை மேலும் திறம்பட வழங்குவதற்காக, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் கட்டடம் மற்றும் மின்சாதனங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ரூபாய் 55 லட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

**3. பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கென புதிய காணொலி பகிர்வுத் தளம் தொடங்குதல்**

பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கென புதிய காணொலி பகிர்வுத் தளம் தொடங்கப்படும்.

அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையம் வழங்கும் பயிற்சித் திட்டங்களை பதிவு செய்யப்பட்ட காணொலிகள்மூலம் அறிந்துகொள்ளும் வகையில், அந்நிறுவனத்திற்கென CSTI-CHANNEL என்ற பெயரில் ஒரு புதிய “காணொலி பகிர்வுத் தளம்” (VIDEO SHARING PLATFORM) தொடங்கப்படும். இது அந்த நிறுவனத்தில் நடத்தப்படும் விரிவுரைகள்/வகுப்புகள் ஆகியவற்றின் நிரந்தர தகவல் களஞ்சியமாக இருக்கும். மேலும், இது பொது நிருவாகம் தொடர்பான பல்வேறு செயல்பாடுகளையும் மற்றும் அரசு நலத் திட்டங்கள் குறித்த விரிவான தகவல்களையும் அறிந்துகொள்ள விரும்பும் பொது மக்களுக்கு பொது நூலகமாக விளங்கும்.

**4. பொதுப் பணிகளில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை மேற்கொள்ள ஒருங்கிணைந்த தனித்த வலைதளம் உருவாக்குதல்**

பொதுப் பணிகளில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை ஒழுங்குபடுத்தி, வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை உறுதி செய்ய பணி நியமனங்களை இணையதளம்மூலம் மேற்கொள்ள தனி வலைதளம் உருவாக்கப்படும்.

அரசுத் துறைகளில் கருணை அடிப்படையிலான பணி நியமன நடைமுறைகளை (COMPASSIONATE GROUNDS APPOINTMENT-CGA) ஒழுங்குபடுத்திடவும் மற்றும் அந்நியமனங்கள் நியாயமானதாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை உறுதிப்படுத்திடவும், மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக செயல்படும்வண்ணம் ஒருங்கிணைந்த தனித்த வலைதளம் உருவாக்கப்படும். இந்த வலைதளம் மனிதவள மேலாண்மை துறையின் மேற்பார்வையின்கீழ் தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தின் (TNeGA) மூலம் உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்படும்.

**5. சென்னை, அண்ணா நகரில் ஒரு புதிய அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம் அமைத்தல்**

சென்னை, அண்ணாநகரில் ஒரு புதிய அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து போட்டித் தேர்வுகளுக்காக தயாராகும் இளைஞர்களின் நலன் கருதி, கூடுதலாக சென்னை, அண்ணா நகரில் நவீன வசதிகளுடன் ஓர் அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் தொடங்கப்படும்.

**6. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்துக்கு புதிய கணினிகள் வழங்குதல்**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்துக்கு புதிய கணினிகள் வழங்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககமானது, ஊழல் தொடர்பான வழக்குகளை விசாரித்து வருகிறது. இது தொடர்பாக, அவ்வப்போது உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியிருப்பதாலும், அவ்வியக்ககத்திற்கு, 2011-2016 வரை வழங்கப்பட்ட கணினிகள், ஒளிநகல் எடுக்கும் இயந்திரம், பல்தொழில் அச்சு இயந்திரம், சர்வர் மற்றும் வீடியோ காமிராக்கள் ஆகியன காலாவதியாகிவிட்டதால் அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே, அவ்வியக்ககத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு E-OFFICE திட்டத்தின்மூலம் தேவையான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

**7. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் பிரிவு அலுவலகங்களுக்கு புதிய குரல் பதிவு செய்யும் கருவிகள் வழங்குதல்**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் பிரிவு அலுவலகங்களுக்கு 46 புதிய குரல் பதிவு செய்யும் கருவிகள் ரூபாய் 6.32 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின்கீழ், தமிழ்நாடு முழுவதும் 46 பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பிரிவு அலுவலர்களால் நடத்தப்பெறும் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளின் விசாரணைக்கு, குரல் பதிவு செய்யும் கருவி (VOICE RECORDER) மிகவும் அவசியமானதாக உள்ளது. எனவே, ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திற்கும் ஒரு கருவி வீதம் 46 குரல் பதிவு செய்யும் கருவிகள் ரூ.6.32 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**8. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலன் விசாரணை அலுவலர்களுக்கு மடிக் கணினிகள் வழங்குதல்**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலன் விசாரணை அலுவலர்களுக்கு 144 மடிக் கணினிகள் ரூபாய் 99 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வு, வீடுகளை சோதனையிடுதல், பொறி வைத்து பிடித்தல் முதலான வழக்குகளில் நிகழ்விடத்திலேயே அறிக்கைகள் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதால், அவ்விசாரணை அலுவலர்களுக்கு மடிக்கணினியின் பயன்பாடு மிகவும் அவசியமாகிறது. எனவே, அவர்களுக்கென 144 மடிக்கணினிகள் ரூ.99.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**9. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கான ஒரு உதவி மையம் (CALL CENTRE) அமைத்தல்**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கான உதவி மையம் (CALL CENTRE) முதல்வரின் முகவரி துறையின்கீழ் ரூபாய் 53.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கையூட்டு தொடர்பாக பொதுமக்கள் தடையின்றி கட்டணமில்லா தொலைபேசிமூலம் எளிதாக புகார் அளிக்க ஏதுவாக, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு உதவி மையம் முதல்வரின் முகவரி துறையின்கீழ் ரூ.53.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மானியக் கோரிக்கையில் பங்குபெற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது பதிலுரையில் மானியக் கோரிக்கைக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவிய தலைமைச் செயலாளர், நிதித் துறையின் முதன்மை செயலாளர், மனிதவள மேலாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர் G. பிரகாஷ், IAS., கூடுதல் தலைமைச் செயலாளர்/பயிற்சித் துறைத் தலைவர் விக்ரம் கபூர், IAS., தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல் ஆணையம், தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையம், தமிழ்நாடு லோக் ஆயுக்தா ஆகியவற்றில் பணி புரியும் உயர் அலுவலர்களுக்கும், அல்லும் பகலும் அயராது உழைத்து, என்னோடு பணியாற்றிய துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதவள மேலாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது காலிப் பணியிடங்கள் நிரப்புவதன் அவசியம், அரசு பணிகளில் தமிழ்வழி கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை, போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் அமைக்க வேண்டியது, தூய்மைப் பணியாளர்களுக்கு நிரந்தர பணி வழங்குதல், போட்டித் தேர்வு விண்ணப்பதாரர்களுக்கு ஒருங்கிணைந்த கைபேசி செயலி போன்றவை குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் 67 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்தேன்.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களுக்கு வேண்டிய விளக்கங்களை அளித்துள்ளேன் என நம்புகிறேன். உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய ஆலோசனைகள் மற்றும் திட்டங்களை நன்கு பரிசீலனை செய்து, முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பதிலுரை வழங்கினார்.

### அரசு எடுத்த நடவடிக்கைக்கு உயர்நீதிமன்றம் பாராட்டு!

# மதுரை சித்திரை திருவிழா சிறப்பான முறையில் நடைபெற நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சென்னை, ஏப். 18 –

சட்டப்பேரவையில் மதுரை சித்திரை திருவிழா சிறப்பு கவன ஈர்ப்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசுகையில், மதுரை சித்திரை திருவிழா சிறப்பான முறையில் நடைபெற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை விளக்கத்துடன் எடுத்துக் கூறினார்.



“மதுரை மாநகரில் நடைபெறவுள்ள சித்திரை திருவிழா குறித்து” சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் செல்லூர்ராஜு சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார். இதனைத் தொடர்ந்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு;–

பி.கே.சேகர்பாபு: மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயிலானது சட்டப்பிரிவு 46(ii)ன்கீழ் விளம்புகை செய்யப்பட்டு துணை ஆணையர்/ செயல் அலுவலர் நிலையிலான செயல் அலுவலரால் நிருவகிக்கப்படும் முதுநிலைத் திருக்கோயில் ஆகும். இத்திருக் கோயிலில் உலகப்பிரசித்தி பெற்ற சித்திரைப் பெருந்திருவிழாவின் சிகர நிகழ்வான அழகர் வைகையாற்றில் இறங்கும் வைபவம் எதிர்வரும் 12-5-2025 அன்று நடைபெற வுள்ளது.

கள்ளழகர் 10-5-2025 அன்று அழகர்கோயிலை விட்டு தங்கப் பல்லக்கில் புறப்பாடாகி, மறுநாள் (11-5-2025) எதிர்சேவை நிகழ்வு நடைபெற்று, 12-5-2025 அன்று அதிகாலையில் வைகையாற்றில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. கள்ளழகர் அழகர்கோயிலிருந்து வண்டியூர் வரை சுமார் 494 மண்டகப்படி களில் எழுந்தருள உள்ளார். அவற்றில் பேரவை உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாலம் கட்டப்பட்டு வரும் மதுரை மாநகர், தல்லாகுளம், பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில் முதல் வைகை நதி வரை 50 திருக்கண் மண்டகப்படிகளில் எழுந்தருள உள்ளார்.

**பாலம் கட்டுமானப் பணிகள்!**

மதுரை மாநகர், தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில் அருகில் பிரதான சாலை முதல் வைகையாற்றின் வைகை நதிக்கரை வரை நெடுஞ்சாலைத் துறைமூலம் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டும் பணி கடந்த 10-1-2023 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 2025 நவம்பர் மாதம் இறுதியில் முடிவு பெற உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகர காவல் ஆணையர், மதுரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட மாவட்ட நிருவாக அலுவலர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு, சித்திரைப் பெருந்திருவிழா துவங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு, மேற்கண்ட பாலம் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டு, சுவாமி வரும் பாதைகள் சுத்தம் செய்யப்பட்டு, பக்தர்களுக்கு எவ்வித இடையூறுகளுமின்றி சுவாமி தரிசனம் செய்வதற்கு திருக்கோயில் நிருவாகம் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பி.கே. சேகர்பாபு: அறிவிக்கப்பட்ட Notified Festivals எனப்படுகின்ற 11 திருவிழாக்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்ற திருக்கோயில்களில் கடைபிடிக்கப்படுகின்றன. தமிழ்நாடு முதல்வர் தலைமை யிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், இந்த 11 திருக்கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களுக்கு, முன்கூட்டியே ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படுகிறது. அதில், மாநகராட்சி, வருவாய்த் துறை, காவல் துறை, இந்து சமய அறநிலையத் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்துக் குழுக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

**ஒருங்கிணைப்புக் கூட்டம்!**

கடந்த மாதம் 11 ஆம் தேதியன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்று, 12 ஆம் தேதியன்று அறங்காவலர் குழுக் கூட்டம், முன்னாள் பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனி வேல்ராஜனுடைய மனைவி ருக்மிணி அறங்காவலர் குழுவின் தலைவராக இருக்கக்கூடிய திருக்கோயிலில் அவர்கள் தலைமையில் குழுக் கூட்டம் நடைபெற்றது. 13 ஆம் தேதியன்று துறை ஆணையாளர் நேரடியாக அங்கு சென்று, ஆய்வு செய்து, ஒரு குழுக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். உறுப்பினர் கோரிய 190 கோடி ரூபாய் செலவில் நடைபெறுகின்ற மேம்பாலப் பணியினால் போக்குவரத்துத் தடை ஏற்படுவதாக தெரிவித்திருக்கிறார்கள். இதை பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், அதைத் துறை சார்பில் அதிகாரிகளாக இருப்பவர்கள் ஆய்வு செய்து, இந்த மாதம் 30 ஆம் தேதிக்குள் அந்தப் பாதையை செப்பனிட்டு, பக்தர்கள் வருகைக்கேற்றார்போல் அது மாற்றியமைக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

**திருவண்ணாமலை திருவிழா நெருக்கடி!**

கடந்த ஆண்டில் திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவின்போது, இதுபோன்று ஒரு நெருக்கடி வந்தபோது, முதலமைச்சர் உத்தரவின் பேரில், RFID எனப்படுகின்ற ரேடியோ அலைவரிசை அடையாள கார்டு ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டு, பக்தர்களுக்கு scan செய்து, எந்த அளவிற்கு பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகிறார்களோ, அந்த அளவிற்கு பொதுமக்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளை புது முயற்சியாக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நானும் இணைந்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், கார்த்திகை தீபத்திரு விழாவிற்கு சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றையும், வரவிருக்கின்ற மதுரை திருக்கலி யாண விழாவின் போது அரசு மேற்கொள்ளவிருக்கிறது என்பதை தெரிவித்து, இந்த மதுரை திருவிழா, நல்ல, சிறப்பான முறையில் நடைபெறும் என்பதை உறுப்பினர் செல்லூர் கே. ராஜு அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கோரியது போல் ஜே, ஜே என்று நடைபெறும். (குறுக்கீடு)

கோ.தளபதி: சித்திரை திருவிழா என்பது ஒரு வார காலமாக நடக்கின்ற திருவிழாதான். அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட காவல் துறை அதிகாரிகளும் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருக்கிறார்கள். ரூ.190 கோடி செலவில் மேம்பால பணிகள் தற்போது நிறுத்தி வைத்து, சுத்தப்படுத்தி மக்கள் சௌகரியமாக, சுகாதார வசதிகளோடு வந்து செல்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டும் என்றால், மேம்பாலத்தில் இதற்கு முன்பு சுமார் 100 வாகனங்களுக்கு அனுமதி வழங்குவார்கள். இந்தமுறை 50 வாகனங்களுக்கு தான் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்தி ருக்கிறார்கள். ஆகவே, மிகச் சிறப்பாக அந்தத் திருவிழாவை நடத்தித் தர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: விரும்பத்தகாத சம்பவம் நடந்தது என்று சொன்னார்கள். அவர் தினந்தோறும் நாளிதழ்களைப் படிப்பதில்லை என்று கருதுகிறேன். நேற்றைக்குக்கூட மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் இருவர் அமர்வு கொண்ட நீதிமன்றத்தில், சித்திரை திருவிழா ஏற்பாடுகளை சரிவர மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சித்திரை திருவிழா விற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை, முழுமையாக நீதிமன்றத்திலே எதிர்மனு தாக்கல் செய்தபோது, அதை முழுமையாகப் படித்து பார்த்த நீதிபதிகள் சிறப்பான ஏற்பாடுகள் இந்த ஆட்சியின் சார்பில் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது என்று கூறியதோடு மட்டுமல்லா மல், உங்களைப்போன்று விளம்ப ரத்திற்காக இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, வழக்கை தள்ளுபடி செய்கிறேன். உங்களுக்கு fine அளிக்கப்படும் என்றவுடன் அந்த மனுதாரர் மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். நான் பார்க்கிறேன் இந்த சட்டமன்றத்தில் ஒவ்வொரு முறையும் அருமை செல்லூர் கே. ராஜு பேசுகின்றபோது, அவர் கடந்த ஆட்சிக் காலத்தில் எவையெல்லாம் அவர் சொல்லி நடக்க வில்லையோ, அவையெல்லாம் இந்த ஆட்சியில் சொல்லி நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைக்குக்கூட அவர் பேசுகின்றபோது, கல்லூரி வேண்டுமென்றுஇந்த ஆட்சியில் தான் நடைபெறும்; கடந்த ஆட்சியில் நடக்கவில்லை என்பதால்தான் இந்த ஆட்சியில் உங்களை அமர வைத்தார்கள் என்று கூறினார்.

இன்றைக்கு பேசும்போதுகூட, டாஸ்மாக் கடைகள் காலத்திலே மூடப்படவில்லை. உங்கள் ஆட்சிக்காலத்தில் மூடப்பட வேண்டும் என்பதைப் போல் கோரிக்கை வைத்திருக்கின்றார். (நிச்சயம் இதையும், உங்களால் செய்ய முடியாததை, உங்களால் இயலாததை செய்து முடிக்கின்ற ஆற்றல் படைத்த ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சித்திரைத் திருவிழா நிகழ்ச்சி, அவர் கூறியதுபோல கொடியேற்றம், அவர் கூறியதுபோல மீனாட்சி பட்டாபிஷேகம், அவர் கூறியதுபோல மீனாட்சி திருக்கல்யாணம், அவர் கூறியதுபோல தேரோட்டம், அவர் கூறியதுபோல அழகர் புறப்படுதல், அவர் கூறியதுபோல ஆற்றில் இறங்குதல், அவர் கூறியதுபோல எதிர்சேவை அனைத்தும் சிறப்பாக நடைபெறும். அந்த மூன்று நாட்களும், திருவிழாக்களில் நானும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் மூர்த்தி அவர்களும், முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களும் உங்களோடு இருப்போம். ஞாயிற்றுக்கிழமை எங்கள் ஆய்விலே நீங்கள் கலந்துகொள்ள வேண்டும். உங்கள் ஆலோசனைகள் ஏதாவது இருந்தால், கூறுங்கள். உங்கள் காலத்தில் நிறைவேற்றா ததை, நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம் என்ற பதிலை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



ஈரோடு வடக்கு மாவட்ட கழகம் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து சத்தி, அரியப்பம் பாளையத்தில் பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.செந்தில்நாதன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம் வரவேற்பில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், எழுத்தாளர் மதிமாறன், இளம் பேச்சாளர் கௌரி மனோகர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் , பவானிசாகர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் திம்பம் பட்டி ஆறுச்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் எல்.பி.தர்மலிங்கம், ஓ.சுப்பிரமணியம், கா.கி.ராஜேந்திரனு, எஸ்.கே.ராஜேந்திரன், ஆர்.ரங்கசாமி, ஜெயராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழக மாநில மாணவரணி அறிவிப்பின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனையில் நாமக்கல் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நாமக்கல் நகரம் கொசவம்பட்டி பகுதி பாகம் எண் 154 இல் இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் நாமக்கல் மாநகராட்சி மேயர். து.கலாநிதி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கடல்அரசன் கார்த்தி, தெற்கு நகர மாணவரணி ஸ்ரீ ராம், இளைஞரணி ராஜேஷ் ஐ.டி. விங், மன்னன் பாக முகவர் தனலட்சுமி மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.